ஶ்ரீ:
ஶ்ரீமதே இராமானுஜாய நம:
ஶ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஶ்ரீமத் வரவரமுனயே நம:



# ஶ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த
# கண்ணிநுண்சிறுத்தாம்பு
# ஐந்தாம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு ஐந்தாம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்
செம்பொன்மாடத் திருக்குருகூர் நம்பிக்கு
அன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே

அர்த்தம்:
இன்று அடியேன் என்று இருக்கும் நான், நம்மாழ்வாரை அடைவதற்கு முன், மற்றவர்களுடைய நற்பொருள்களையும், பெண்களையும் நம்பிக் கிடந்தேன். இன்றோ பொன்னால் செய்த உயர்ந்த மாடங்களை உடைய திருக்குருகூருக்குத் தலைவரான நம்மாழ்வாருக்கு பக்தனாய் மாறி சதிரை உடையவனானேன்.

வ்யாக்யான சாரம்:
நல்விஷயங்கள் கைவிடும்படியான தம்முடைய குற்றம் எது என்னில், அனாதி காலம் கீழ்மையான விஷயங்களில் இழிந்து கிடந்தேன் என்கிறார். தம்மைப் புன்மையே வடிவானவர் என்றும் தமக்கு ஆழ்வார் எல்லாம் ஆனார் என்றும் முன்பு சொன்னார். இப்பாட்டில் தம்முடைய குற்றங்களையும் நம்மாழ்வார் தமக்கு செய்த உபகாரத்தையும் காணீர் என்று சொல்கிறார். இப்பொழுது நம்மாழ்வாருடைய கடாக்ஷத்தாலே சதுரனானேன் என்கிறார். இதனால் தம்முடைய இழிமையைப் பாராத நம்மாழ்வாருக்கு கைங்கர்யபரன் ஆனேன் என்கிறார்.

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்:
சர்வேஸ்வரனுடைய சொத்தான ஆத்மாவை என்னுடையது என்று நம்பிக் கொண்டிருந்தேன் என்கிறார். அதாவது இவருடைய புன்மையானது பிறர் பொருளை தம்முடையது என்று நம்பியது. அத்தகைய நம்பிக்கையாலே தம்மால் ஏற்பட்ட குற்றங்களைக் கூறுகிறார். வஸ்துக்களில் ப்ரதானப் பொருளான

ஆத்மாவை அபஹரித்தேன் என்கிறார். இவருடைய குற்றம் எதுவென்னில், பகவத் அனுபவத்தோடு நில்லாது நம்மாழ்வார் அளவு வரும்படியான ஆத்மாவை அபஹரித்ததன்றோ?

பிறர் பொருளை:
ஒரு பொருளை அபஹரிக்கும் போது அதன் பெருமை மற்றும் அதை உடையவனுடைய பெருமையைக் கொண்டே அதற்குரிய ப்ராயசித்தமும் இருக்கும். இவர் அபஹரித்ததோ உயர்ந்த ஆத்மவஸ்து, அதை உடையவனோ எம்பெருமான்!

நம்பினேன் மடவாரையும்:
அத்தகைய உயர்ந்த வஸ்துவை அபஹரித்தவனுக்கு மற்றைய களவு ஒரு பொருட்டில்லை என்பதால், தேஹ சம்பந்தமான விஷயங்களையும் அபஹரித்தேன் (நம்பினேன்) என்கிறார்.

மடவாரையும் முன்னெலாம்:
அவனிடம் காட்ட வேண்டிய மஹா விஸ்வாசத்தை பெண்களிடத்தில் வைத்தார். அதை விட வேண்டும் என்று தம்முடைய ஆசார்யர்கள் சொல்லியும் அதை அனாதி காலம் விடாமல் பற்றியிருந்தேன் என்கிறார். பெண்கள் என்றதும் அதைப் பன்மையில் கூறியதும் பல விஷயங்களில் ஏற்பட்ட கீழ்மையான ஈடுபாட்டைக் குறிக்கிறது.

முன்னெலாம்:
ஆத்ம வஸ்துவோ நித்யமானது; எம்பெருமானோ நித்யமானவன்; காலமோ அனாதி. எனவே முன்னெலாம் என்கிறார்.

செம்பொன் மாட:
நம்மாழ்வார் திருவவதாரம் செய்த ஊராகையால் அங்கு இருக்கும் அனைத்தும் இவருக்கு உயர்ந்ததாகிறது. ஐஸ்வர்யங்களில் பூர்த்தியுடைய நம்மாழ்வார் அவதாரம் செய்த ஊர். அவ்வாழ்வார் தாம் வந்த வழி அறியாத இவரைத் தன்னிடத்தில் பக்தி உடையவராகச் செய்தார். அதாவது மடவார் என்னும் மற்றைய விஷயங்களில் அழுந்திக் கிடந்த இவரை இவ்வாறு நம்மாழ்வார் செய்தார்.

நம்பி:
இப்படி இவர் அனாதி காலம் ஆத்மாவை அபஹரித்தும், இவரைத் தேற்றும் அளவுக்கு இருப்பதன்றோ நம்மாழ்வாருடைய பூர்த்தி.

இன்று அன்பனாய்:
தம்முடையது என்றிருப்பதை விட்டு அவனுக்காய் இசைந்து, இதர விஷயங்களைத் தவிர்ந்து, பகவத் விஷயத்திலும் நில்லாது அதின் எல்லையான நம்மாழ்வார் அளவு வரும்படி இருக்க, இக்க்ரமம் இல்லாது முதலடியிலேயே இதெல்லாம் தமக்கு உண்டாகியது என்கிறார்.

அடியேன்:
தேஹாத்மாபிமானம் செய்த நாளில் என்/நான் என்றவர், உண்மையான தத்வ ஞானம் பிறந்த அளவில் அடியேன் என்கிறார்.

சதிர்த்தேன் இன்றே:
அவனை அடைவது பூர்ணமன்று; நம்மாழ்வாரை அடைவதே பூர்ணம் என்று சதிர்த்தார். மற்றைய விஷயங்களைப் பற்றிக் கிடந்த தாம் இன்று ஆழ்வாரைப் பற்றி சதுரனானேன் என்று சொல்லுகிறார். ஆழ்வாரை அடையும் அளவுக்கு சதிரை உடையவனானேன் என்கிறார். ஆசார்யர்களை நம்பி என்பதையும் அவர்கள் அழைத்தால் அடியேன் என்று சொல்வதையும் மதுரகவி ஆழ்வார் எடுத்துக் காட்டினார்.

மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்
நஞ்சீயர் நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னப்பாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்